முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு தொகுதி, திருச்செங்கோடு சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாசியோடு கட்டடம் கட்டும் பணி சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சார்–பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆணை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எங்கள் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

207—

புதிய கட்டடம்

***9843—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

ஈரோடு, மேட்டூர் ரோட்டில் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் தற்போது 5,500 சதுர அடி பரப்பளவில் cement sheets போடப்பட்ட பாதுகாப்பான சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் நிலையில், இச்சங்கத்திற்கு மேலும் ஒரு புதிய கட்டடம்

2018 ஜூன் 25]

கட்டுவதற்கான அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியில் ஒரு வெண்மைப் புரட்சியை உருவாக்கித் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். பசுமைச் சாலைத் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கின்ற, வேளாண் நண்பர்களுடைய இரு விழிகளாக விளங்கிக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.*

ஈரோடு மாநகர், மேட்டூர் ரோட்டில் உள்ள ஈரோடு பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் 1962–ல் துவங்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டு cement sheet *போடப்பட்ட கட்டடம் கட்டப்பட்டது. இது 160 முகவர்களையும், 100–க்கும் மேற்பட்ட பாலகங்களையும் கொண்டு இயங்கி வருகிறது. நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. பரப்பளவு 30,000 சதுர அடி இடம் உள்ளது. இங்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டத்தின்கீழ் ரூ.60 இலட்சம் ஒதுக்கி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருக்கரத்தால் புதிய பாலகம் ஒன்றும் துவக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டடம் கட்டப்பட்டு 46 ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் கட்டடம்* cement sheets *போட்டு கட்டப்பட்ட கட்டடம் ஆகும். மேலும், இங்கு 20,000 சதுர அடி இடமும் இருக்கிறது. இங்கு புதியதாக ஒரு கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் அனைத்து அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதேபோல, இந்தப் பால் கூட்டுறவுச் சங்கத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2018 ஜூன் 25

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு ஒன்றியத்தில் 717 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இது தவிர, ஈரோடு மற்றும் பவானி ஆகிய இரண்டு இடங்களில் மட்டும் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. ஈரோடு, மேட்டூர் ரோட்டில் உள்ள பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் 6–8–1962 முதல் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் பால் கொள்முதல் செய்யும் பணியில் ஈடுபடுவதில்லை. இச்சங்கம் ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து பெறப்படும் பதப்படுத்தப்பட்ட பாக்கெட் பாலை நுகர்வோருக்கு விற்பனை செய்யும் பணியை மட்டும் செய்து வருகிறது. இச்சங்கத்தில் மொத்தம் 5,722 உறுப்பினர்கள் உள்ளனர். ஈரோடு மாநகரில் 145 முகவர்கள்மூலம் நாளொன்றிற்கு 43,000 லிட்டர் பால், இச்சங்கத்தால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தமாக 43,600 சதுர அடியில் நிலம் உள்ளது. தற்போது இச்சங்கம் 5,500 சதுர அடியில் சிமென்ட் sheets போடப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கத்திற்குச் சொந்தமாக 10,000 சதுர அடி நிலத்தில் அதிநவீன பாலகம் ஒன்று ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, 13–3–2018 முதல் செயல்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள் சொன்னதுபோல், அந்தப் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தால், ஈரோடு மாவட்ட பொது மேலாளர் மற்றும் துணைப் பதிவாளர் (பால் வளம்) ஆகியோரை அனுப்பி ஆய்வு செய்து, அந்தக் கட்டடம் பாதுகாப்பற்ற, பலமிழந்த கட்டடமாக இருப்பது தெரியவந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, புதிய கட்டடம் கட்டித் தர ஆவின் நிருவாகம் நடவடிக்கை எடுக்க பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பழமையான கட்டடம்தான் அது. அதை உடனடியாகக் கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்

2018 ஜூன் 25]

என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பரிசீலிக்கப்படும் என்று கூறியதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

208—

தியாகிகளுக்கான ஓய்வூதியம்

***26017— திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகைக்கு இணையாக தமிழ் மொழிப்போர் தியாகிகளுக்கும் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு, 1960 ஆம் ஆண்டுகளில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நிகழ்ந்தாலும், 1984 ஆம் வருடத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் முதலில் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 1984 ஆம் ஆண்டிற்குப்பின், அதற்கடுத்து 1997 ஆம் ஆண்டில் தி.மு.க. அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது சட்டரீதியான சிக்கல் எழுந்தது. உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு போட்டு, இவர்களுக்கு ஓய்வூதியம் தரக் கூடாது என்று ஓர் உத்தரவு வாங்கியிருந்தார்கள். அதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம், இதை உருமாற்றி, அதாவது இந்தி எதிர்ப்புத் தியாகி என்று கொடுத்தால்தான் தவறு என்பதால் அதை, தமிழறிஞர்கள் என்ற பெயரில் அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்போதைக்கு உயிருடன் இருக்கும் 401 நபர்கள் இந்த ஓய்வூதியத்தைப்